தீபாவளி: கடைவீதிகளில் குவியும் மக்கள்





கோவை, பெரிய கடைவீதியில் ஞாயிற்றுக்கிழமை குவிந்த மக்கள். (வலது) டவுன்ஹால் பகுதியில் ஏற்பட்ட போக்குவரத்து நெரிசல்.

கோவை, நவ. 1: தீபாவளிப் பண்டிகைக்கு இன்னும் சில நாள்களே உள்ள நிலையில், கோவை கடை வீதிகளில் மக்கள் கூட்டம் குவிந்து வருவதால், வியாபாரம் களைகட்டியுள்ளது.

தீபாவளிக்கு ஆண்டுதோறும் மக்கள் புத்தாடை அணிந்து, இனிப்பு, பட்டாசுகளுடன் கொண்டாட்டத்தில் ஈடுபடுவர். இந்த ஆண்டு தீபாவளிப் பண்டிகை நவம்பர் 8-ஆம் தேதி கொண்டாடப்பட உள்ளது.

இதை முன்னிட்டு, கோவையில் உக்கடம் டவுன்ஹால், ராஜ வீதி, பெரியகடை வீதி, ஒப்பணக்கார வீதி, உப்புக்கிணறு சந்து உள்ளிட்ட பகுதிகளில் புத்தாடைகள் வாங்க மக்கள் கூட்டம் அலைமோதுகிறது.

ஞாயிற்றுக்கிழமை விடுமுறை தினம் என்பதால் கடை வீதிகளில் காலை முதலே மக்கள் கூட்டம் அதிக அளவில் காணப்பட்டது.

புத்தாடைகள் மட்டுமின்றி ஆபரணப் பொருள்கள், அலங்காரம் மற்றும் வீட்டு உபயோகப் பொருள்களையும் மக்கள் ஆர்வத்துடன் வாங்கிச் சென்றனர். காந்திபுரத்தில் கிராஸ்கட் சாலை, 100 அடி சாலையில் உள்ள கடை வீதிகளில் மக்கள் கூட்டம் அலைமோதியது. மாவட்டத்தின் பிற பகுதிகளில் இருந்து மாநகருக்குள் அதிக அளவில் வாகனங்கள் வந்ததால் டவுன்ஹால், கிராஸ்கட் சாலை, 100 அடி சாலையில் போக்குவரத்து நெரிசல் காணப்பட்டது.

கண்காணிப்பு, பாதுகாப்புப் பணி தீவிரம்: புத்தாடைகளை வாங்குவதற்காக மாநகருக்கு ஏராளமான மக்கள் வரும் நிலையில், குற்றச் சம்பவங்களைத் தடுக்கும் வகையில் டவுன்ஹால் பெரியகடை வீதி, ராஜ வீதி, ஒப்பணக்கார வீதி, கிராஸ்கட் சாலை, 100 அடி சாலை உள்ளிட்ட பகுதிகளில் மாநகர காவல் துறை சார்பில் 10-க்கும் மேற்பட்ட இடங்களில் கண்காணிப்பு கோபுரங்கள் அமைக்கப்பட்டு தீவிர கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கூட்டத்தில் மக்கள் தங்கள் உடைமைகளை பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும், சந்தேகம் ஏற்படும்படியான நபர்கள் குறித்து போலீஸாரிடம் தெரிவிக்க வேண்டும் என்பன உள்ளிட்டவை குறித்து போலீஸார் ஒலிப்பெருக்கி மூலம் அறிவுறுத்தி வருகின்றனர்.

இதேபோல, 10-க்கும் மேற்பட்ட இடங்களில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டு, மக்கள் நடமாட்டத்தை போலீஸார் கண்காணித்து வருகின்றனர்.

சாதாரண உடையில் 7 தனிப்படை போலீஸார் கடை வீதிகளில் ரோந்துப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

கோவையில் 6 பகுதிகளில் ஆர்எஸ்எஸ் அணிவகுப்பு ஊர்வலம்

முன்னாள் மத்திய அமைச்சர் எல். முருகன் பங்கேற்பு



கோவை குறிச்சி பகுதியில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஆர்எஸ்எஸ் ஊர்வலத்தில் பங்கேற்ற முன்னாள் மத்திய அமைச்சர் எல்.முருகன்.

கோவை, நவ. 1: கோவையில் 6 பகுதிகளில் ராஷ்ட்ரீய ஸ்வயம்சேவக சங்கத்தின் (ஆர்எஸ்எஸ்) அணிவகுப்பு ஊர்வலம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

குறிச்சி பகுதியில் நடைபெற்ற அணிவகுப்பில் முன்னாள் மத்திய இணை அமைச்சர் எல். முருகன் கலந்துகொண்டார்.

குறிச்சி பகுதியில் நடைபெற்ற அணிவகுப்பை இடையர்பாளையம் மகாலட்சுமி கோயில் பொருளாளர் கே. நாகராஜ், இடையர் பாளையம் ஊர் கவுண்டர் பி.ராதாகிருஷ்ணன், கொங்கு மண்டல தேவேந்திர குல வேளாளர் சங்கத்தின் தலைமை நிர்வாகி சதீஷ் மலர் ஆகியோர் கொடியசைத்து தொடங்கிவைத்தனர்.

தெலுங்குபாளையத்தில் நடைபெற்ற அணிவகுப்பை வினோத்குமார் தொடங்கிவைத்தார். அணிவகுப்புக்குப் பின்னர் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் சுவாமி வேதாந்த ஆனந்தா ஆசியுரை வழங்கினார். தொழிலதிபர் திருமேணி தலைமை உரையாற்றினார். ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் மாநில மக்கள் தொடர்புத் துறை பொறுப்பாளர் சின்னபாலன் சிறப்புரையாற்றினார். இதேபோல, வெள்ளலூர், சீரநாயக்கன்பாளையம், ராம் நகர், கணபதி ஆகிய பகுதிகளிலும் ஆர்எஸ்எஸ் அணிவகுப்பு நடைபெற்றது.

இந்த அணிவகுப்பு நிகழ்ச்சிகளில் சீருடை அணிந்த தொண்டர்கள் 1,480 பேரும், பொதுமக்கள் 900 பேரும் பங்கேற்றனர்.

வால்பாறையில்...



ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் 100-ஆவது ஆண்டு நிறைவையொட்டி, வால்பாறையில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற அணிவகுப்பில் பங்கேற்ற ஒரு பகுதியினர்.

காலமானார்
பொன்னுசாமி கவுண்டர் (108)



சூலூர், நவ.1: கும்மியாட்ட மூத்த கலைஞர் பொன்னுசாமி கவுண்டர் (108) வயது மூப்பு காரணமாக உயிரிழந்தார்.

கோவை மாவட்டம், சூலூர் அருகேயுள்ள சித்த நாயக்கன்பாளையம் பகுதியைச் சேர்ந்தவர் பொன்னுசாமி கவுண்டர். கும்மியாட்ட கலைஞரான இவர், ஏராளமானோருக்கு அந்தக் கலையை கற்றுக் கொடுத்துள்ளார். தமிழர் பண்பாடு மற்றும் பாரம்பரியக் கலைகளுடன் அவர் கொண்டிருந்த தொடர்பு கிராம மக்களிடையே தனி மரியாதையை ஏற்படுத்தியது. இந்நிலையில், வயது மூப்பு காரணமாக அவர் கடந்த அக்டோபர் 30-ஆம் தேதி உயிரிழந்தார்.

ஐந்து தலைமுறைகளைக் கண்ட அவரது நீண்ட வாழ்க்கையையும், குடும்பத்தினர் மற்றும் கிராம மக்களுடன் அவர் கொண்டிருந்த உறவையும் நினைவுகூர்ந்து மரியாதை செலுத்தப்பட்டு, அவரது உடல் சனிக்கிழமை அடக்கம் செய்யப்பட்டது.

அனுமதியின்றி சுவரொட்டிகள்: ரூ.11.68 லட்சம் அபராதம்

கோவை, நவ.1: கோவை மாநகராட்சிப் பகுதிகளில் அனுமதியின்றி சுவரொட்டிகள் ஒட்டியது தொடர்பாக கடந்த 5 மாதங்களில் ரூ.11.68 லட்சம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து மாநகராட்சி ஆணையர் கட்டா ரவி தேஜா வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: மாநகராட்சிக்குள்பட்ட முக்கிய சாலைகள், அரசு அலுவலகங்கள் மற்றும் பொது இடங்களில் மாநகராட்சியின் அனுமதியின்றி சுவரொட்டிகளை ஒட்டுவதற்கும், விளம்பரப் பதாகைகளை வைப்பதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் பல்வேறு இடங்களில் விதிகளை மீறி சுவரொட்டிகள் ஒட்டப்படுவதுடன், விளம்பரப் பதாகைகளும் வைக்கப்படுகின்றன. இதனால் வாகன ஓட்டிகளின் கவனம் சிதறுவதுடன், போக்குவரத்துக்கும் இடையூறு ஏற்படுகிறது.

இதைத் தடுக்கும் வகையில், மாநகராட்சியின் 5 மண்டலங்களிலும் கண்காணிப்புப் பணி தீவிரப்படுத்தப்பட்டு, அபராத நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதன்படி, நடப்பு ஆண்டில் ஜூன் முதல் அக்டோபர் 31-ஆம் தேதி வரை அனுமதியின்றி சுவரொட்டிகள் ஒட்டியது தொடர்பாக மொத்தம் ரூ.11,68,300 அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

எனவே, கடை உரிமையாளர்கள், வணிக நிறுவனங்கள், தனியார் அமைப்புகள், நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் மற்றும் மக்கள் தங்களது விளம்பரங்களுக்காக முக்கிய சாலைகள், அரசு அலுவலகங்கள் மற்றும் பொது இடங்களில் அனுமதியின்றி

சுவரொட்டிகளை ஒட்டுவது, பேனர்கள் மற்றும் விளம்பரப் பதாகைகளை வைப்பதை தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

மீறுவோர் மீது அபராதம் உள்ளிட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அன்னூர் அருகே தீப்பிடித்து எரிந்த மின்சார ஸ்கூட்டர்



தீப்பிடித்து எரிந்த மின்சார ஸ்கூட்டர்.

அன்னூர், நவ. 1: அன்னூர் அருகே சாலையோரம் நிறுத்தப்பட்டிருந்த மின்சார ஸ்கூட்டர் ஞாயிற்றுக்கிழமை திடீரென தீப்பிடித்து எரிந்தது.

அன்னூர்-கோவை சாலையில் கே.ஜி. பள்ளி அருகே ஒரு கடையின் முன் மின்சார ஸ்கூட்டர் ஒன்று ஞாயிற்றுக்கிழமை நிறுத்தப்பட்டிருந்தது. அப்போது, அதில் இருந்து புகை வெளியேறிய சில நிமிஷங்களிலேயே ஸ்கூட்டர் தீப்பிடித்து எரிந்தது. இதைப் பார்த்த அப்பகுதி மக்கள் அன்னூர் தீயணைப்பு நிலையத்துக்கு தகவல் தெரிவித்தனர்.

சம்பவ இடத்துக்கு தீயணைப்பு வீரர்கள் தீயை அணைத்தனர். இருப்பினும் ஸ்கூட்டர் முழுவதுமாக எரிந்து சேதமடைந்தது.

இச்சம்பவம் குறித்து போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

மூதாட்டி வீட்டில் 27 பவுன் திருட்டு

வடவள்ளி , நவ.1: வடவள்ளி அருகே மூதாட்டி வீட்டில் 27 பவுன் நகைகள் திருடப்பட்ட சம்பவம் தொடர்பாக போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

வடவள்ளி அருகேயுள்ள அனன்யாஸ் நானா நானி குடியிருப்பைச் சேர்ந்தவர் ராஜாமணி (87). கணவர் இறந்து விட்டார். மகள் அமெரிக்காவில் வசித்து வருகிறார்.

இந்நிலையில், தனியே வசித்து வரும் ராஜாமணியை கவனிப்பதற்காக பெரம்பூரைச் சேர்ந்த காயத்ரிதேவி என்ற பெண் பணியில் இருந்துள்ளார். இந்நிலையில், அவர் தனது அம்மாவுக்கு உடல் நிலை சரியில்லை எனக்கூறி விட்டு கடந்த 24-ஆம் தேதி பெரம்பூருக்குச் சென்றுள்ளார்.

இதையடுத்து, வீட்டை சுத்தம் செய்வதற்காக உமாதேவி என்பவர் அன்றைய தினம் வந்துள்ளார்.

அப்போது, அவர் காயத்ரிதேவி தங்கியிருந்த அறையில் கிடந்த தங்க கம்மலை எடுத்து அவரிடம் கடந்த 23-ஆம் தேதி கொடுத்தேன் என ராஜாமணியிடம் உமாதேவி கூறியுள்ளார்.

இதனால், சந்தேகமடைந்த ராஜாமணி, பீரோவைத் திறந்து பார்த்துள்ளார். அப்போது, அதில் இருந்த 27 பவுன் நகைகள், ரூ.6,500 ரொக்கம் ஆகியவை திருடு போனது தெரியவந்தது.

இது குறித்து தொண்டாமுத்தூர் காவல் நிலையத்தில் ராஜாமணி அளித்த புகாரின் பேரில் போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

வடவள்ளியில் இயற்கை வேளாண் விற்பனை மையம் தொடக்கம்

வடவள்ளி, நவ.1: வடவள்ளி உழவர் சந்தையில் இயற்கை வேளாண் விளை பொருள்கள் விற்பனை மையம் ஞாயிற்றுக்கிழமை தொடங்கப்பட்டது.

வேளாண்மைத் துறை துணை இயக்குநர் ஷீலா பூசலட்சுமி, வேளாண்மை உதவி அலுவலர் பிரவீன்குமார், அலுவலர் பாக்கியலட்சுமி ஆகியோர் விற்பனை மையத்தை தொடங்கிவைத்தனர். வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமைகளில் அதிகாலை 4 மணி முதல் மதியம் 12 வரை செயல்படும் இந்த மையத்தில் நஞ்சு இல்லா காய்கறிகள், பழங்கள் விற்பனை செய்யப்படும் என்றும், நஞ்சில்லா பொருள்களை விவசாயம் செய்யும் விவசாயிகளுக்கு ஆதரவளிக்கும் வகையில் இந்த மையம் தொடங்கப்பட்டுள்ளது என்றும், இந்த மையத்தில் விற்பனை செய்ய விருப்பம் உள்ள விவசாயிகள் அருகில் உள்ள உழவர் சந்தையில் விண்ணப்பித்து அடையாள அட்டை பெற்று விற்பனை செய்யலாம் என்றும் வேளாண் அலுவலர்கள் தெரிவித்துள்ளனர்.

பாங்க் ஆஃப் பரோடா
Bank of Baroda
India's International Bank
119 FOUNDATION YEAR LEADING WITH TRUST

பேங்க் ஆஃப் பரோடா
கிளை : ROSARB (பிராந்திய ஒடுக்கப்பட்ட சொத்துக்கள் வசூல் கிளை)
2வது தளம், எண்.82, பேங்க் ரோடு, கோயம்புத்தூர் – 641 018
போன் : 0422 2302423, 2302324. மின்னஞ்சல் : sarcoi@bankofbaroda.bank.in

அசையாச் சொத்துக்களுக்கான விற்பனையின், விற்பனை அறிவிப்பு
பிற்சேர்க்கை –IV-A (காண்க, நிபந்தனைகளின் விதி 6(2) & 8(6))

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002 பிரிவு 6(2) & 8(6)-ன் கீழ் அசையாச் சொத்துக்களுக்கான விற்பனையின் மின்-ஏல விற்பனை அறிவிப்பு.
கீழே விவரிக்கப்பட்டுள்ள பேங்க் ஆஃப் பரோடா வங்கியில் அடமானம் வைக்கப்பட்டுள்ள சொத்தினை வங்கி அங்கீகாரம் பெற்ற அதிகாரி கவாதீனம் எடுத்துள்ளார். இதன் மூலம் பொதுமக்கள் மற்றும் கடன்தாரர்கள், ஜாமின்தாரர்கள், அடமானதாரர்கள் அனைவருக்கும் அறிவிப்பது என்னவென்றால், பாதுகாக்கப்பட்ட கடனீந்தாரின் அடமானத்திற்குள்ளான/ஏடு வைக்கப்பட்ட, வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் கவாதீனப் படுத்தப்பட்ட கீழே குறிப்பிட்டுள்ள சொத்து, நிலுவையை வசூலிக்க வேண்டி "எங்கு உள்ளனவோ அந்நிலையில்", "என்ன உள்ளனவோ அப்படியே", "எப்படியுள்ளதோ அப்படியே" மற்றும் "பொறுப்பேற்காத நிலையில்" எனும் முறையில், மின் ஏல விற்பனை செய்யப்பட உள்ளது.
கடன்தார்(கள்) / அடமானதார்(கள்) / உத்தரவாதமளித்தவர்(கள்) / பாதுகாக்கப்பட்ட சொத்து(க்கள்) / நிலுவைகள் / நிர்ணயிக்கப்பட்ட விலை / முன்வைப்புத் தொகை / மின் ஏலத் தேதி மற்றும் நேரம் / ஏல அதிகரிப்பு தொகை போன்ற விபரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

வ. எண்.	கடன்தார்கள் / உத்தரவாதம்அளித்தவர்கள் பெயர் மற்றும் விலாசம்	அசையாச் சொத்தின் கருக்க விபரம் வில்லங்கங்கள் ஏதேனும் இருப்பின் அதனுடன்	மொத்த நிலுவைத் தொகை	மின் ஏலத் தேதி / நேரம்	1. குறைந்தபட்ச விலை, 2. முன் வைப்புத் தொகை 3. ஏல உயர்வுத் தொகை	கவாதீன நிலை (ஆக்கபூர்வ/ கொள்நிலை)	சொத்தினைப் பார்வையிடும் தேதி / நேரம்
1.	**1. M/s. அக்ஷார் டைல்ஸ்** (முன்னர் M/s. அக்ஷார் எண்டர்பிரைசஸ் என்றழைக்கப்பட்டது) **கடன்தாரர்**, எண்.20, தேவாங்கப்பேட்டை வீதி எண்.2, புதிய பூ மார்க்கெட் அருகில், கோயம்புத்தூர் – 641 001. **2. திருமதி. சகுனா நயாக்பாரா (உரிமையாளர் : M/s. அக்ஷார் டைல்ஸ், அடமானதாரர் மற்றும் கடன்தாரர்),** க/பெ மெஹர்ஸ் R படேல், ஃப்ளாட் எண்.419, 4வது தளம், விஜய்தீபாஸ் KTVR கிரீன் ஃபீல்ட், தவசி நகர், வேலாண்டிபாளையம், கோயம்புத்தூர் – 641 025. **3. திரு. மெஹர்ஸ் R படேல் (உத்தரவாதமளித்தவர் : M/s. அக்ஷார் டைல்ஸ், அடமானதாரர் மற்றும் கடன்தாரர்),** க/பெ ரமேஷ் படேல், ஃப்ளாட் எண்.419, 4வது தளம், விஜய்தீபாஸ் KTVR கிரீன் ஃபீல்ட், தவசி நகர், வேலாண்டிபாளையம், கோயம்புத்தூர் – 641025.	**இனம்-1 :** கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், கோயம்புத்தூர் இணை II சார் பதிவு மாவட்டம், கோயம்புத்தூர் தாலூகா, தெலுங்குபாளையம் கிராமம், பட்டா எண்கள் 152, 258, பொது சர்வே எண்.483/1A & 1B. இதிலுள்ள 9.31 புஞ்சை ஏக்கர். இதில் எல்லைகள் விபரம் : பொது சர்வே எண்.480/1F மற்றும் பொது சர்வே எண்.483/1A & 1B ல் உள்ள மீத நிலத்துக்கு வடக்கு, பொது சர்வே எண்.483/1A & 1B ல் உள்ள மீதமுள்ள நிலத்துக்குத் தெற்கு, பொது சர்வே எண்.483/1A & 1B ல் உள்ள மீதமுள்ள நிலத்துக்கு மேற்கு, பொது சர்வே எண்.483/1A & 1B ல் உள்ள மீதமுள்ள நிலத்துக்குக் கிழக்கு. இதன் மத்தியில் பொது சர்வே எண்.483/A & 1B ல் உள்ள ஏக்கர் 1.14.194 சதுரடி. **இனம்-2 :** மேற்குறிப்பிட்ட கிராமம், பட்டா எண்.329, பொது சர்வே எண்.480/1F ல் உள்ள 1.70 ஏக்கர் புஞ்சை, தீர்வை ரூ.2.33. இதில் கீழ்வரும் எல்லைகளுக்கிடையிலான நிலம் : பொது சர்வே எண்.480/1F ல் உள்ள மீதமுள்ள நிலத்துக்கு வடக்கு, 30 அடி அகல லே.அவுட் ரோட்டுக்குக் கிழக்கு, பொது சர்வே எண்.483/A & 1B சொத்துக்குத் தெற்கு, பொது சர்வே எண்.480/1F ல் உள்ள மீதமுள்ள சொத்துக்கு மேற்கு. இதன் மத்தியில் பொது சர்வே எண்.480/1F ல், தென்வடல் 30 அடி மற்றும் கிழமேல் 30 அடி எனச் சேர்ந்த மொத்தம் 2 சென்ட் 297 சதுரடி.	**18.10.2026 தேதியன்று, ரூ.75,47,774.98 (ரூபாய் எழுபத்து ஐந்து லட்சத்து நாற்பத்து ஏழாயிரத்து எழுநூற்று எழுபத்து நான்கு மற்றும் பைசா தொண்ணூற்று எட்டு மட்டும்)** மற்றும் பின்வட்டி, செலவுகள், பிற கட்டணங்களுடன்.	**07.12.2026** பிற்பகல் 2.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை	1. ரூ.61,00,000/- 2. ரூ.6,10,000/- 3. ரூ.50,000/-	அடையாள (Symbolic) கவாதீனம்	**05.12.2026** காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை
	இனம்-3 : மேற்குறிப்பிட்ட கிராமம், பட்டா எண்கள் 152, 258, பொது சர்வே எண்.483/1A & 1B ல் உள்ள 9.31 ஏக்கர் புஞ்சை, இதில் எல்லைகள் விபரம் : பொது சர்வே எண்.480/1F ல் தவசி நகரில் உள்ள ஒதுக்கீட்டு மனைக்கு வடக்கு, விஜய தீபா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் லிட்டிற்குச் சொந்தமான பொது சர்வே எண்.483/1A & 1B ல் உள்ள நிலத்துக்குத் தெற்கு, விஜய தீபா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் லிட்டிற்குச் சொந்தமான பொது சர்வே எண்.483/1A & 1B ல் உள்ள நிலத்துக்கு மேற்கு, தவசி நகர், கடை மனை எண்கள் 11 மற்றும் 12 க்கு மற்றும் மீதமுள்ள லே.அவுட் நிலத்துக்குக் கிழக்கு. இவ்வெல்லைகளுக்கிடையிலுள்ள பொது சர்வே எண்.483/1A & 1B ல் உள்ள 0.37.35 சதுரடி. இனம் 1, 2 மற்றும் 3 ன் மொத்தம் 67234 சதுரடி பொது சர்வே எண்கள் 483/ 1A & 1B மற்றும் 480/1F ல் உள்ள நிலம், இதில் 900 சதுரடி நிலம் கோயமுத்தூர் மாநகராட்சிக்கு ரோடு அமைக்கும் காரியங்களுக்காகவும் மற்றும் 8800 சதுரடி நிலம் பொது வண்டித் தடத்துக்காகவும் கொடுத்தது போக, மீதமுள்ள 57534 சதுரடி நிலத்தின் எல்லைகள் விபரம் : பொது சர்வே எண்.483/1F ல் உள்ள தவசி நகர் ஒதுக்கீட்டு மனைக்கு வடக்கு, பொது சர்வே எண்.483/ 1A & 1B ல் உள்ள மீதமுள்ள நிலத்துக்குத் தெற்கு, பொது சர்வே எண்.483/ 1A & 1B மற்றும் 480/1F ல் உள்ள தென்வடல் பொது வண்டித் தடத்துக்கு மேற்கு, பொது சர்வே எண்.483/ 1A & 1B ல் உள்ள மீதமுள்ள நிலத்துக்குக் கிழக்கு. இவ்வெல்லைகளுக்கிடையில், பொது சர்வே எண்.483/ 1A & 1B ல் உள்ள 57534 சதுரடி நிலம், மேற்படி சொத்து தவசி நகரில், கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்டு அமைந்துள்ளது. இதில் 1465/145496 பிரிபடாத பங்கு, அதாவது 671.63 சதுரடி. அதனோடான 1465 சதுரடி சிறப்புக் கட்டுமானப் பரப்பு கொண்ட ஃப்ளாட் எண்.419, சரிவிகிதத்திலான பொதுப் பகுதியும் சேர்ந்த சொத்து, நான்காவது தளத்தின் வட கிழக்கு மூலையில், 4வது விங்கிலுள்ள, KTVR கிரீன்ஃபீல்டு, தவசி நகர், கிரீன் சிட்டி, சாஸ்திரி ரோடு, வேலாண்டிபாளையம், கோயம்புத்தூர் – 641 025 என்கிற விலாசத்திலுள்ளது, தரைத் தளத்தில், வாகன நிறுத்துமிடத்தின் இட உரிமையுடன் (கார் நிறுத்தம் எண்.58). இச்சொத்து திரு. மெஹர்ஸ் R படேல் மற்றும் திருமதி. சகுனா M நாயக்பாரா ஆகியோருக்குச் கூட்டாகச் சொந்தமானது. இச்சொத்து கோயம்புத்தூர் மாநகராட்சி மாநகர எல்லைக்குள் அமைந்துள்ளது.				
2.	**திருமதி. சத்யா R (கடன்தாரர்),** க/பெ. லேட். திரு. S.ரமேஷ், எண்.32, இன்ட் ராயல் வில்லா பார்க், வடுகபாளையம், பல்லடம், கோயம்புத்தூர் – 641 664. **செல்வி. R பானு ரேகா (லேட் திரு. S. ரமேஷின் சட்டபூர்வ வாரிசுதாரர்),** த/பெ. லேட் திரு. S. ரமேஷ், எண்.32, இன்ட் ராயல் வில்லா பார்க், வடுகபாளையம், பல்லடம், கோயம்புத்தூர் – 641 664. **செல்வி. R அட்சயா வர்ஷினி (லேட் திரு. S. ரமேஷின் சட்டபூர்வ வாரிசுதாரர்),** த/பெ. லேட் திரு. S. ரமேஷ், எண்.32, இன்ட் ராயல் வில்லா பார்க், வடுகபாளையம், பல்லடம், கோயம்புத்தூர் – 641 664.	திருப்பூர் பதிவு மாவட்டம், பல்லடம் சார் பதிவு மாவட்டம், பல்லடம் தாலூகா, பல்லடம் நகராட்சி எல்லைக்குள், வடுகபாளையம் கிராமம், பொது சர்வே எண்.12/2, உட்பிரிவினதன்படி பொது சர்வே எண்.12/2A1, இதில் லே.அவுட் ஏற்படுத்தப்பட்டு, கோயம்புத்தூர் மண்டலம் நகர மற்றும் ஊரகத் திட்ட உதவி இயக்குநரின் அங்கீகாரத்தை, உத்தரவு எண்.மவ/கோ.மா.எண்.11/2014 ல் பெற்ற, 'இன்ட் ராயல் வில்லா பார்க்'கில் அதிலமைந்த மனை எண்.31 க்குரிய நிலம் மற்றும் வீட்டுக் கட்டிடம் அமைந்த 2600 சதுரடிக்கு எல்லைகள் விபரம் : 23 அடி அகல தென்வடல் லே.அவுட் ரோடுக்குக் கிழக்கு, மனை எண்.35 ல் உள்ள நிலத்துக்கு மேற்கு, பொது சர்வே எண்.12/1 ல் உள்ள நிலத்துக்குத் தெற்கு, மனை எண்.32 மற்றும் 33 ல் உள்ள நிலங்களுக்கு வடக்கு. இதன் மத்தியில், அளவுகளாக, கிழமேல் வடபுறம் 65 அடி, கிழமேல் தென்புறம் 65அடி, தென்வடல் மேற்புறம் 40 அடி, தென்வடல் கிழபுறம் 40 அடி, ஆக மொத்தம் மேற்படி 2600 சதுரடி, வழக்கமான வழித்தட உரிமைகளுடன் மற்றும் சொத்திற்குச் செல்லும் வழக்கமான ரோடுகளில் உபயோக உரிமைகளுடன். விரிவான விபரம் ஆவண எண்.10239/2016 ல் உள்ளது. இச்சொத்து, ரமேஷின் மனைவி திருமதி. சத்யா மற்றும் சண்முகம் மகன் லேட். திரு. S.ரமேஷ் ஆகியோருக்குக் கூட்டாக சொந்தமாயுள்ளது. இச்சொத்து பல்லடம் தாலூகா எல்லைக்குட்பட்டு உள்ளது.	**25.10.2026 தேதியன்று, ரூ.59,85,704.07 (ரூபாய் ஐம்பத்து ஒன்பது லட்சத்து என்பத்து ஐந்தாயிரத்து எழுநூற்று நான்கு மற்றும் பைசா ஏழு மட்டும்)** மற்றும் பின்வட்டி, செலவுகள், பிற கட்டணங்களுடன்.	**07.12.2026** பிற்பகல் 2.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை	1. ரூ.1,26,00,000/- 2. ரூ.12,60,000/- 3. ரூ.50,000/-	அடையாள (Symbolic) கவாதீனம்	**05.12.2026** காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை
3.	**திரு. S. சிவபிரகாசம் (கடன்தாரர்),** த/பெ திரு. ஸ்ரீனிவாசன், கதவு எண்.1/624, சாய் சக்தி கார்டன், சின்ன வடுகபாளையம், வடுகபாளையம் புதூர், பல்லடம், கோயம்புத்தூர் – 641 664.	திருப்பூர் பதிவு மாவட்டம், பல்லடம் சார் பதிவு மாவட்டம், முந்தைய பல்லடம் தாலூகா, தற்போது சூலூர் தாலூகா, வடுகபாளையம் கிராமம், சர்வே எண்.353/4C ல் உள்ள 2.00 ஏக்கர் நிலம், அருகில் சர்வே எண்.343/4E மற்றும் 346/1 ல் உள்ள நிலங்களுடன் ஒன்றாக்கப்பட்டு, மொத்தம் 4.00 ஏக்கர் நிலத்தில் லே.அவுட் வீட்டு மனைகள் அமைக்கப்பட்ட 'சாய் சக்தி கார்டனில்', லே.அவுட்டில் அடங்கிய மனை எண்.72ன் 1200 சதுரடிக்கு எல்லைகள் மற்றும் அளவுகளின் விபரம் : எல்லைகள் : மனை எண்.81 க்குத் தெற்கு, 23 அடி அகல கிழமேல் லே.அவுட் ரோடுக்கு வடக்கு, மனை எண்.71 க்குக் கிழக்கு, மனை எண்.73 க்கு மேற்கு. அளவுகள் : கிழமேல் இருபுறமும் 30 அடி; தென்வடல் இருபுறமும் 40 அடி. அங்குள்ள பக்கா ஆர்சிசி தார்க் கூரையிட்ட கதவு எண்.1/624 குடியிருப்புக் கட்டிடத்துடன். இச்சொத்து பல்லடம் தாலூகாவின் வட்டார வார்ச்சி அலுவலரால் 22.10.2021 தேதியில் பார்வை ந.க.எண்.2490/2021/A4 ல் முறைப்படுத்தப்பட்டுள்ளது. சொத்தானது நிலம் புபுப்பித்தல் பதிவகத் திட்டத்தின் சர்வேயின்படி சர்வே எண்.343/6, பட்டா எண்.2561 ல் பல்லடம் பஞ்சாயத்து யூனியன், வடுகபாளையம் புதூர் கிராமப் பஞ்சாயத்து எல்லைக்குள் உள்ளது. திரு. ஸ்ரீனிவாசன் மகன் திரு. S.சிவபிரகாசத்திற்குச் சொந்தமானதாக, முந்தைய பல்லடம் தாலூகா தற்போது சூலூர் தாலூகா எல்லைக்குள் உள்ளது.	**25.10.2026 தேதியன்று, ரூ.40,51,976.34 (ரூபாய் நாற்பது லட்சத்து ஐம்பத்து ஒராயிரத்து தொள்ளாயிரத்து எழுபத்து ஆறு மற்றும் பைசா முப்பத்து நான்கு மட்டும்)** மற்றும் பின்வட்டி, செலவுகள், பிற கட்டணங்களுடன்.	**07.12.2026** பிற்பகல் 2.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை	1. ரூ.41,27,000/- 2. ரூ.4,12,700/- 3. ரூ.50,000/-	கொள்நிலை (Physical) கவாதீனம்	**05.12.2026** காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை

விற்பனை குறித்த விரிவான நிபந்தனை விபரங்களுக்கு **https://bankofbaroda.bank.in/e-auction** இணையதளம் 'லிங்க்'கில் மற்றும் ஆன்லைன் ஏலத்தின் போர்டல் **https://baanknet.com** -ல் பார்வையிடலாம். மேலும் விருப்பமுள்ள ஏலதாரர்கள் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியை **போன் : 9538993885** என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

தேதி : 30.10.2026
இடம் : கோயம்புத்தூர்

(அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி)
பேங்க் ஆஃப் பரோடா